**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 299/2022

பெயர் : திலகர் (DW2) (Cross )

த/க/பெ. :

தேதி : 21.11.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஊரக வளர்ச்சி துறையில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர். நான் 2013ல் அரசு வேலையில் சேர்ந்தேன். 29.09.2025ம் தேதி கொள்ளிடம் அலுவலகத்தில் சேந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா. ஆ. 1 பயனாளிக்கு நிர்வாக அனுமதி ஆவணம். எந்த சர்வே எண்ணுக்கு அனுமதிக் கொடுக்கப்பட்டது என்பதை சா.சா. ஆ. 1ல் இருக்கிறதா என்றால் அதில் இருக்காது. எந்த சர்வே எண் என்பதை என்னால் சொல்ல இயலுாது என்றால் சரிதான். தாவா சர்வே எண் சொத்துக்கு அனுமதி கொடுத்துள்ளோம் என்று என்னால் கூறஇயலாது என்றால் சரிதான். தாவா சொத்தில் தான் பயனாளியின் வீடு அமைந்துள்ளது என்பதை என்னால் கூற இயலாது என்றால் சரிதான். சா.சா. ஆ. 2 முதல் 4 ல் தாவா சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வே எண் குறிப்பிடப்படாது. எந்த சொத்தின் ஆவணத்தை 3ம்பிரதிவாதி கொடுத்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அப்போதைய அதிகாரிக்கு தான் தெரியும். அந்த ஆவணம் எங்கள் கோப்பில் இருக்குமா என்றால் இருக்க வாய்ப்பில்லை. அவர் என்ன ஆவணங்கள் சமர்பித்துள்ளார் என்பதை பார்த்தால் தான் எந்த சொத்தில் வீடு கட்டிள்ளார் என்பது தெரியும் என்றால் சரிதான். 3ம்பிரதிவாதிக்கு அனுமதிக் கொடுத்த சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் அவர் தாயார் பெயரில் உள்ளது. ஆனால் அந்த ஆவணத்தை நான் பார்த்ததில்லை. தாயார் பெயரில் உள்ள ஆவணம் மற்றும் விருப்ப கடிதத்தை பெற்றுக் கொண்டதாக எங்கள் அலுவலகத்தில் எங்கள் அலுவலகர் கூறினார். Dupty Admin என்னிடம் நீதிமன்ற சாட்சியத்திற்கு வரும் போது கூறினார் . அதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் எங்களிடம் இருந்த ஆவணங்களை கொடுத்துவிட்டேன். அவ்வாறு தாயார் பெயரில் உள்ள ஆவணத்தை கொடுத்திருந்தால் எங்கள் அலுவலக கோப்பில் இருந்திருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு அவர் தாயார் விருப்ப கடிதம் கொடுத்திருந்தாலும் அது எங்கள் அலுவகத்தில் இருந்திருக்க வேண்டும் என்றால்

சரிதான். அவர் தயார் பெயரில் உள்ள ஆவணம் மற்றும் விருப்ப கடிதம் கொடுக்கவில்லை என்றாலும் நான் 3 மற்றும் 10ம்-பிரதிவாதிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் இன்றி நிர்வாக அனுமதி கொடுக்க மாட்டார்கள். என் அழைப்பாணையிலேயே எந்த சொத்து, எந்த சர்வே எண் குறிப்பிடிவில்லை என்றால் சரியல்ல 3ம் பிரதிவாதி/பயனாளிக்கு ஒதுக்கிய உள்ள வீடு தாவா சர்வே எண்ணில் கட்டியுள்ளாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணில் முருகேசன் வீடு கட்டவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.